**சார்பு நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை :– திருமதி S. மும்தாஜ், B.Sc.,B.L.,**
**சார்பு நீதிபதி, சீர்காழி.**

––––

2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண். 233/2023–ல் இடைமனு எண். 3/2024**

1. பழனிச்சாமி (இறந்தார்)
2. தேவி ..மனுதாரர்கள்/வாதி

..எதிர்..

அலெக்ஸாண்டர் ...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 05.08.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபொழுது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.வேணுகோபாலான், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ்.சுந்தரய்யா, அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கு A B C D ஆக்கிரமிப்பு பகுதியை துல்லியமாக அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்ய சர்வேயர்/ கமிஷனருக்கு உத்தரவிட வேண்டி உ.வி.மு.ச. கட்டளை 26, விதி 9ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :**

மனுதாரர் அசல் வழக்கின் 2ம் வாதி. வசப் பரிகாரம் கோரி பிரதிவாதி மீது அசல் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்கில் வாதி தரப்பில் வா.சா.1, வா.சா.2 விசாரணை முடிந்து வா.சா.3ன் விசாரணைக்காக போடப்பட்டுள்ளது. குறுக்கு விசாரணையில் வாதி தரப்பில் வழக்கு தொடரப்பட்ட A B C D ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி பரப்பளவு சரியல்ல, அது குன்றக்குடி மடத்திற்கு சொந்தம் என்றும், 1ம் வாதி பெயரில் நில வரி திட்டத்தின் கீழ் பட்டா வழங்கியிருப்பது செல்லத்தக்கதல்ல, அது வாதிகளுக்கு சொந்தமில்லை என்று வழக்கு சொத்துக்களின் உரிமையை பிரதிவாதி மறுத்துள்ளார். A B C D பகுதியின் நீள அகலம் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள போதும், அதன் பரப்பளவு சரியல்ல, நான்கெல்லைகள் காண்பிக்கப்படவில்லை என்று பிரதிவாதி தரப்பில் உண்மைக்கு மாறாக கூறப்பட்டுள்ளது. எனவே இவ்வழக்கில் A B C D ஆக்கிரமிப்பு பகுதியை துல்லியமாக அளவீட்டு அறிக்கை தாக்கல் செய்ய சர்வேயர் கமிஷனருக்கு உத்தரவிட கோரியுள்ளார்.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2025.12.10 18:11:57 +0530

3. <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிர் வழக்குரையின் சுருக்கம்:</u>

மனுவில் சங்கதிகள் உண்மையல்ல. வசப்பரிகாரத்திற்காக தாக்கல் செய்துள்ள சொத்தில் பரப்பளவோ, நான்கெல்லையோ குறிப்பிடப்படவில்லை. வழக்கு சொத்தில் வாதிகளுக்கு எந்த உரிமையும் செல்லத்தக்கதல்ல. வாதிகளுக்குரிய சொத்தை பிரதிவாதி ஆக்கிரமிக்கவில்லை என்று தெளிவாக எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார். 2022ல் தாக்கல் செய்த எதிர்வழக்குரையிலேயே வசம் கோரிய பகுதியின் பரப்பளவை குறிப்பிட்டு காட்ட சர்வேயர் கமிஷன் நியமனம் கோரி மனு தாக்கல் செய்யவில்லை என்பதை எதிர்மனுதாரர்கள் கூறியுள்ள போதும், அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் தற்போது இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். வாதி தரப்பில் 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட பிறகு தாக்கல் செய்துள்ள இம்மனு முற்றிலும் சாட்சியங்களை உருவாக்கும் நோக்கில் அமைந்துள்ளதால் இம்மனுவை தள்ளுபடி செய்யக் கோரியுள்ளார்.

4. இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

<u>5. தீர்வு.</u>

இருதரப்பும் கேட்கப்பட்டு வழக்காவணங்கள் பரிசிலீக்கப்பட்டன. அசல் வழக்கானது வசப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வாதிகள் தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 விசாரிக்கப்பட்டு, வாதிகள் தரப்பில் கூடுதல் சாட்சியத்திற்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்ட நிலையில் மனுதாரர் தரப்பில் வழக்கு சொத்து A B C D ஆக்கிரமிப்பு பகுதியை துல்லியமாக அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்ய சர்வேயர் உதவியுடன் கூடிய நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்யக் கோரியுள்ளார். இதற்கு எதிர்மனுதாரர் தரப்பில் வாதிகள் தரப்பில் சாட்சியங்களை உருவாக்கும் நோக்கில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது. வழக்காவணங்களின் பரிசீலனையில் வழக்குரையில் வழக்கு சொத்து A B C D பகுதியின் கூடுதல் விஸ்தீரணம் மற்றும் நான்கெல்லைகள் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் வழக்குரையுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி வரை படத்தில் குறிப்பிட்டுள்ள A B C D பகுதிக்கு உட்பட்டது வழக்கு சொத்து என்று குறிப்பிட்டுள்ளது. மேலும் மனுதாரருக்கு உரிய எந்த சொத்தையும் எதிர்மனுதாரர் ஆக்கிரமிக்கவில்லை என்று எதிர்வழக்குரையில் தெளிவாக குறிப்பிட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே வழக்கு சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள புல எண்.464/16A–ல் வழக்குரையின் தோராய வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள AB CD பகுதியை துல்லியமாக அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்வதன் மூலம் வழக்கில்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2025.12.10 18:12:05 +0530

தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சனைக்கு முழுமையான தீர்வு காணவும், கூடுதல் வாய்மொழி சாட்சியம் முன்னிடப்படுவதை தவிர்க்கவும் உதவக்கூடியது என்பதால் நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்கலாம் என்று தீர்மானித்து இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**6. முடிவாக**, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. வழக்கறிஞர் ஆணையராக வழக்கறிஞர் திரு. எஸ். அரவிந்தராஜ் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். வழக்கறிஞர் ஆணையர் இருதரப்பிற்கும் முறையான முன் அறிவிப்பு கொடுத்து, வழக்கு சொத்தை பார்வையிட்டும் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தாலுக்கா சர்வேயர் உதவியுடன் வழக்கு சொத்தை அளவீடு செய்து 27.01.2026 ம் தேதிக்குள் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யவேண்டியது. வழக்கறிஞர் ஆணையர் ஊதியம் ரூ.6,500/- என்று நிர்ணயிக்கப்படுகிறது. மேற்படி தொகையை மனுதாரர் வழக்கறிஞர் ஆணையரிடம் நேரடியாக செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் குறிப்பெடுத்து கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2025-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2025.12.10 18:12:15 +0530

சார்பு நீதிபதி.
சீர்காழி

<u>பின் இணைப்பு</u>

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி சான்றாவணம்</u> - இல்லை-
<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u> - இல்லை-

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2025.12.10 18:12:20 +0530

சார்பு நீதிபதி,
சீர்காழி.

நேரிய / வரைவு உத்தரவு
இ.ம.எண்.3/2024-ல்
அசல்வழக்கு எண்.233/2023
நாள் -10.12.2025